வாக்குமூலம்
உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்.
வழக்குஎண். CC 675/2020
வழக்குசாட்சி LW2/PW2

| பெயர் | வளர்மதி | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | மனோகரன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 63 |

தேதி 28.01.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டார்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் மாத்தூர் MMDA வில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். 2019 ஆம் ஆண்டு 10 ஆம் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. திருமணத்திற்கு சென்று இருந்தோம். அன்று மாலை பக்கத்து வீட்டுக் கார்ர்கள் போன் செய்து எனது வீட்டில் திருடு போய் இருப்பதாகவும், போலீசார் வந்திருப்பதாகவும் கூறினார்கள். உடனடியாக புறப்பட்டு அதிகாலை 3 மணிக்கு வந்த போது போலீசார் உடைந்த பூட்டினை இருந்த கதவினை பூட்டி சாவியை அருகில் இருந்தவர்களிடம் அளித்திருந்தார்கள். அதனை பெற்று உள்ளே சென்று பார்த்த போது பொருட்கள் அனைத்தும் கலைந்துக்கிடந்தது. பீரோவில் இருந்த 2 கால் சவரன் மோதிரம் காணாமல் போயிருந்தது. 2 நாள்கள் கழித்து காவல் நிலையம் சென்று எனது கணவர் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரணைச் செய்தார்கள். 3 மாதங்களுக்கு முன்பு தான் மனு செய்து என்னுடைய மோதிரத்தினை நீதிமன்றத்தில் பெற்றுக் கொண்டேன். யார் திருடினார்கள் என்று எனக்குத் தெரியாது.

**குறுக்கு விசாரணை**

நானும் எனது கணவரும் 10ம் தேதி இரவே வந்துவிட்டேன் என்றால் ஆமாம். போலீசார் வேறு தேதியில் நானும் எனது கணவரும் புகார் அளித்திருந்ததாக கூறியிருந்தால் அது தவறு என்றால் ஆமாம். சம்பவம் எப்படி நடந்த்து என்பது நேரடியாக தெரியாது என்றால் ஆமாம்.

**மறுவிசாரணை இல்லை.**